**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.712/2024**

**Prosecution witness : ம.சா. 2** **Date : 25.10.2025.**

| | |
|---|---|
| **Name : பன்சிலால்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் முதல் விசாரணை**

1) நான் தற்போது அழைப்பாணையின் பேரில் வந்துள்ளேன். நான் ஓமலூர் அலுவலகத்தில் GST சம்மந்தமாக கண்காணிப்பாளராக வேலை செய்து வருகிறேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். GSTIN 33BHEPJ0787K1Z7 (Selvaraj Jayabharathi) என்ற எண்ணானது செல்வராஜ் ஜெயபாரதி என்ற பெயரில் பதிவாகியுள்ளது.

2) மேற்படி GST எண்ணில் invoice no.3, நாள்.29/04/2024 GST கணக்கில் பதிவாகியுள்ளது. மேற்படி invoice க்கான மொத்த மதிப்பு ரூ.31,82,550/- ஆகும். Taxable value ரூ.30,31,000/- ஆகும். மத்திய வரி ரூ.75,775/- மற்றும் மாநில வரி ரூ.75,775/- ஆகும். நான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வழங்கப்பட்ட அதிகார கடிதம் **ம.சா.ஆ.7** ஆகும். மேற்படி GST கணக்கு பதிவேடு சான்றொப்பமிட்ட நகல் **ம.சா.ஆ.8** ஆகும். மேற்படி ஆவணங்களின் வாயிலாக புடவை வியாபாரம் செய்தது சம்மந்தமாக விற்பனை வரி செலுத்தப்பட்டுள்ளது என்றால் நேஷ்மிதா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திலிருந்து ஆரா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.